உ

சிவமயம்.



## வலிவலம்

## ஞானவள்ளல் பரஞ்சோதி மகான்

# உயர்ஞானத் திருச்சபை

# விளக்கம்.

★

இயற்றியவர் :

**வை. இராமன்**

தலைமை ஆசிரியன்.

சச்சிதானந்த உதவிபெறும் ஆரம்பப்பள்ளி.

**வல்லவினாயகன்கோட்டகம்.**

(தஞ்சை மாவட்டம்.)

சக்ரவர்த்தி அச்சகம், கீழ்வேளூர்.

PUBLIC LIBRARY
AUG 1956

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# அறிவிப்பு.

புண்ணிய பூமியாகிய பரத கண்டத்தின் கண்ணே, புனித நீராகிய பொன்னிமா நதி பாய் சோழவள நாட்டில் ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதானந்த நித்த, முத்த, புத்த, சுத்த, ஷாட் குண்ய ஸ்வயம்பிரகாச ஸ்வரூபியாகிய சிவபிரான் தனது அருட்சத்தியாகிய உமா தேவியார் வினாயக கந்த, நந்தி, யாதி கணங்களோடும்: ஆன்ம கோடிகட்கு அனுக்கிரகிக்கும் பொருட்டு கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கும் சிவ க்ஷேத்திரங்களுள் ஒன்றாயும், மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் என்பதின் பெருமை வாய்ந்ததும், ஆன்றோர்களால் மிகு கொடை வடிவினர் பயில் வலிவலம், மா மாதுறையும் வலிவலம்; மல்லல் நீடிய வலிவலம் நீராருஞ் சடைமுடியார் நிலவு திருவலிவலம் செங்கணுதலார் மேவு திருவலிவலம், என்று புகழ்பெற்றதுமாகிய வலிவலயியல்பும், ஷை யூரில் ஞானவள்ளல் பரஞ்சோதி மகான் அவர்கள் உயர்ஞானத் திருச்சபை விளக்கமும், ஷை சபையின் மெய்யுணர்வாளர்களில் ஒருவனும், ஏர்வைக்காடு பொதுநலப் பள்ளி தலைமை ஆசிரியனுமான என்னால் இயற்றியருளிய பின்வரும் செய்யுட்களால் நன்கு விளங்கும்.

தங்களன்பன்,

12—3—54.

**வை. இராமன்.**

தலைமை ஆசிரியன்,

சச்சிதானந்த உதவிபெறும் ஆரம்பப் பள்ளி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வலிவலம்

# பரஞ்சோதி மகான்

# உயர்ஞான திருச்சபை

# விளக்கம்

காப்பு.

பிடியத னுருவமுமை கொளகரியின்
பேருரு கொடுவு யரடியார்
நெடிய வெவ்வினை காய் கணபதி வரவே
நிறையருள் புரின மதிறைவ
னடிமலரவர் பாலுமை திருவடியு
மவர் மகிழ் கயமுகனடியும்
படி புகழ் முருகனடியு மெய்யடியார்
பத முடி கொடுபவ மொழிவாம்.

பரஞ்சோதி துதி.

2. உணர்வே உலகம்
உலகமே உணர்வென்
றருள் பரஞ் சோதி
யடியிணை தொழுவாம்.

வலிவல வளம் சொல்லற் கரிதெனல்.

3. ஆர்கலி புடை சூழுலகினில்
நீர்வள முதலி யாவுநிலவிய
பேர் பெறு மேக சக்ர புரத்தெழி
லாரளப்பவர் யானுரை செய்திட

### ஷியூர் இன்னூர்க்கின்ன தெனல்.

4. திருமகடனக்கு செந்தாமரை மாடந்
திகழு மத்திரு மகள் கொழுனன்
மருமகடனக்கு வெண்டாமரைக் கூட
மயல் கெட வொளிவளர் ஞானந்
தருமகடனக்கு யோகத்தனி பீடஞ்
சலதி சூழணி கொணற்றரையாம்
பெருமகடனக்கு வெழில் கொணற்றிலதம்
பேர்பெற விளங்கு மிப் பேரூர்.

### வயல் முதலிய சிறப்பு.

5. கண்ணகன் வயலி னீர் நிறை வரம்புங்
கழனியினீர் செல் பாய் காலு
விண்ணுயர் குடிமி மாட மாளிகையும்
விழைவு கொள் கோட்டமுந் துறவுந்
தண்ணமை யெழிலிதங்கு கோபுரமுந்
தழை வர்த்தி சுதை மதிலழகும்
எண்ணரு னந்த வனத்தின தியல்பு
மியம்புதற் கரியனற் பதியே.

### ஷியூரில் நிகழும் ஒலிகள்.

6. அந்தணர் நாளுமடைவதா யோது
மணி யிருக்காதி யாய மறையுஞ்
சந்தனுன் மறையிஞெலி யொடு சிறூர்கள்
சதுர் விளையாட் டொலி, பொழிலில்
விந்தை சேர் பரவை பாட்டொலி, மனிகை
மிகு பண்ட மாற்றொலி யிறைவை
யந்திர வொலியு மதகினீ ரொலியு
மனுதின மொலிக்கும் வாஞெலியும்

**இதுவுமது**

7. வாளைபாய் கழனியுழவர் வாயொலியு
மங்கையர் குரவை பாட்டொலியும்
வேளை முன் காய்ந்தோனலயத் தோங்கும்
விழாவொலி தமிழ்மறை யொலியுங்
காளையர் வதுவையொலி பள்ளி யொலியுங்
கடுவிசை யூர்தியி னொலியும்
நீளுறு கடலினொலியினைப் பொருது
நேர்மை கொளொலி திகழ்பதியே

**நெல் முதலிய விளைபொருள்**

8. நெற் பயிரினிய கரும்பென வோங்கி
நீளுறு கதிர் முழும் விளையு
மிக்கனற் கரும்புங்கமு கெனனிமிரு
மென்கமுகொலி கலி தெங்கின்
வர்க்கமாய்த் திகழுந் தெங்கு கார்ப்பந்தர்
வழுவிலா காலென னிகழுந்
தக்கவப்பதியில் விளைனவமான
தானிய வகையளப் பரிதே

**சோலை முதலியன**

9. மஞ்சமர் சோலை வாழை மா பலாவு
மற்றுள தருவுமானிரையு
மிஞ்சிய வைத்தியசாலை யாவணமு
மிகு குற்றங் கடினியாயத் தலமுந்
தஞ்சமென்றடைவோர் பசிதணியிலமுந்
தகு பள்ளிய முதளிமடமுங்
கஞ்சனீர்க் குளமும் படிகளினியல்புங்
கணிப்பறு மறுகும் வாய்ப்பதியே.

### ஷியூரார் நெறிவழுவாமை

10. ஆடவர் வடிவில் மாரனை னிகர்த்து
மழகமர் பகளிர் களெல்லாம்
பீடுறு மிரதி தன்னையே னிகர்த்தும்
பேரியல் மனையறம் புரிவார்
நீடுநூல் வேதனெறிகர் மகாண்டி
நிலைவழாவு பாசனுகாண்டி
பாடிலாஞான காண்டியுங் தத்தம்
பாங்கி னின்றெழு குனற்பதியே.

### தீர்த்த முதலியன

11. சக்கர தீர்த்த மக்கினி தீர்த்தகஞ்
சார்புறு மாலைனே ரகழி
மிக்கமால்கய வாதினகரன் வேதன்
மேவுகார ணனைவர் மகவான்
தக்கபேரெய்து புனையுயர் கொன்றை
தகு வில்வவன வேத்திரகீயஞ்
சக்கரபுரமும் போக பூமியுமாய்ச்
சாற்று வரிப்பதி தனையே

### சிவாலயம்

12. செந்தழல் போலு மேனியனடியார்
செவ்விய மனத்தினி லன்பாய்
வந்தனை செயுனன் மனத்துணை னுத
மாபெருந் தேசிகனென்னு
மிந்துவாழ் சடையானிட முறுமாழை
யொண்கணி யினிதுள மகிழுஞ்
சுந்தர யானைமுக வனுங்கு கனுந்
தொண்டருங் கோயில் கொளிடமாய்

### விண்டுவாலயம்

13. அண்டர் தந்துயர மகற்றிட வளங்கொ
ள யோத்தியாள் தசரதன் சுதனுய்
வண்டமர் கூந்தல் ஜனகியை மணந்து
மங்கை கைகேசி சொன்னயமார்
பண்டைய வேதமென வுளங்கொண்டு
பரவிய கடன்மிசை யணையைக்
கண்டி ராவணனை வதைத்தருளேக
கதிர்விடுனேமியா னிடமாய்

### மாரியம்மன் கோவில்

14: பச்சை மாற்கினிய தங்கையா
யரன்றன் பாரியாயுலகவர் போற்றி
இச்சைகொள் காத்தவராயனை யீன்று
வெழில் வளர் கிராம தேவதையா
யச்சமதகற்றி யாண்டிடு மாரி
யம்மை னற்றிரு வுளமிரங்கி
மெச்சிடுங் கோயில்கொண்டு வீற்றிருக்கு
மேன்மையு மெழிலு மார்பதியே

### ஐயனர் கோவில்

15. திரிபுர மெரித்த சிவனருள் வரத்தை
தீதற சோதிப்பேனென்றவ்
வரன்றலை மீது கைவைக்க வெழுமு
னவெலிக்காயினு ளொளித்த
பரனிலை யுணர்ந்து மாய மோகினியாய்
பதகனை வதைத்தருளரிதன்
கரமதிற்றேன்றுமரி கரப்புதல்வன்
கவினுறுங் கோயில் கொளிடமாய்

### பாடல் விபரம்

16. வம்பரு மலர்னற் சோலைசூழ் காழி
வாழ்வதா முயர் திருஞான
சம்பந்த னுவுக்கரசொடு மெழிலார்
தம்பிரான் றோழருங் குமரன்
பண்புயர் புகழாய் பாடிடு மருணகிரி
கிழார் பாவலர் புகழு
மும்பரும் வியக்கு மளகையைப் புறங்கா
ணுயர் செல்வ நிறைந்தொளிர்பதியே

### திருவாளர். மனத்துணைநாத தேசிகர் அவர்கள்

17. இருங்குட லுலகிற் பெருஞ் சௌபாக்கிய
மில குறுந்துதியொடு வாணி,
விரும்புனி ளாயுள் வீரஞ் சந்தானம்
விளங்குனற்றன முயரழகு
பெருந்துணிவ் விசயந் தானியம் போகம்
பெண்டிர் பேரறங்குலம் பெருமை
நிறம்பிய வருளுமடக் கனல் வாய்மை
நேர் பெறு வறிவுண்மைப் பொருளும்

### இதுவுமது

18. பாருளோர் மதி நன் நடையொடு பரன்பால்
பத்தியு மாளுடைப் பிள்ளை
யார் தமிழ் மறையில் மிகு கொடை வடிவி
னவர் பயில் வலிவல மென்று
ஏர்பெற வுரை செய்படி கொடைவடிவா
மெழிற் கந்தசாமி தேசிகர் தம்
சீர்தவப் புதல்வர் மனத்துணைநாத
தேசி கோத்தமர் மகிழ்வெய்தும்

### இதுவுமது

19. வையக மதிக்கும் நற்குணத்தோடு
மறு விலா நற் செய்கை வாய்ந்து,
தெய்வ நற்கணவனென வழிபாடு
தீதற புரிவதா லுலகில்
பெம்மென மழையும் பெயுங் கற்புக்கரசாம்
பேர் பெறு லோக சுந்தரியு
மெய் வழுவாத வரி வளை கரத்து
மேன்மை கொளிளைய சந்ராவும்

### இதுவுமது

20. வண்டமர் கூந்தல் மங்கையற்கரசா
மாபெருந் தேவி மாரிருவர்
கண்டு கண் களிக்கு மருங்குல விளக்காம்
கனகமென்புதல் வியு மகிழ
எண்டிசை யோரும் புகழ்ந்து போற்றிசைப்ப
ஏர் பெறு மில்லற வியல்பு
விண்டிடற் கரிய நான் மறை நெறியில்
மேம்படு வாழ்வு பெற்றோங்க

### இதுவுமது

21. அன்பினிற் சிறந்த ராமசுப்பென்னு
மையராம், நண்பரு மறிவு
மின்பு சாலுலகினியற் கையுந் தேர்ந்த
வியல் தியாகராஜ தேவென்னு
மன்பதைப் புகழுமிருவரைக் கலந்து
மானிலத் தெளியவர் துயரு
மென் பெருங் குறையுந் தீர்த்து வாழ்வருளு
மேற்றங் கொளுன்னதப் பதியே

### திருவாளர் ஷண்முகம் பிள்ளையவர்கள்

22. வள்ளையாரென்னு முயர்னதி தெற்காய்
மதியுளான் வடக்கிலு மமைந்து
கள்வழி பொழில் சூழின்னரும் பதியில்
கடும்பசி யுடையவர் முகம்பார்த்
துள் நிறையன்புமின் சொலுமாறு
துயர்தரு கார்நிகர் கரங்கொள்
தெள்ளியோர் கருது ஷண்முகம் பிள்ளை
சீர்திகழ் வாழ்வுயர் பதியே

### பரஞ்சோதி மகான் உயர்ஞான சபை

23. கலிவலங் கெடனல்லாரமு லோம்புங்
கற்றனன் மறையவரிலங்கள்
வலிவுறு சகமூன்றுடைனமு முனாற்று
மங்கலமெனு முயர்பதியி
னலமலிஞான திருச்சபை னிறுவி
னமன்வலி தொலைத்திடு முணர்வாம்
பலமருள் ஞானவள்ளல் தாள் கங்குல்
பகலினு முளத்தினில் வைப்பாம்

### இதுவுமது

24. பிறவியாம் பெரிய வெழுகடல் வீழ்ந்து
பேதுறுஞ் சீவர் களந்த
வெறியதோர் கடலின்ற கன்று பேரின்ப
மெய்தி வாழ்வுறுவதற் கிரங்கி
பெரியதோர் ஞான சற்குருவாகி
பெரும் புவிதனி லவதரித்து
தெரிவுறு வகனற் பிரமமென்றேதுந்
தேசி கோத்தமனடி தொழுவாம்

இதுவுமது

25. கைகள்தாம் தாளமியற்றிட யிரண்டு
கண்க னன்ஞசியை னேக்க
பையனன்ஞவுஞ் சுவை யினிதறிய
பகர் செவியோசை யினிலவ
துய்யமென்ஞசி கந்தமதுணர
தொட்டிடத்திவைகளி னிகழ்வை
யைய்ய மதகலவருள் பரஞ்சோதி
யண்ணல் தாளனுதினம் பணிவாம்

இதுவுமது

26. பகர்வதற்கரிய வணுவினி னன்ருய்
பரிந்து வீற்றிருந்திடு ஞனும்
நிகரிலா வறிவிலிருந்திடு நானும்
நீளொளி மறிவிடு நானுந்
துகளிளா தொனியி லிருந்திடு நானுந்
சுய பரிபூரண யிருளி
லகமதானுனற் பிரமமென் ருேது
மறுதினை யடைந்துய வம்மின்

இதுவுமது

27. நாசமதிலாது நாம் திரிகாலும்
நசித்திடா திருப்பதால் சத்து
பேசிடுமிருளில் பொருள்களி னியல்பைப்
பிரித்தறி நிலைமையால் சித்து
நேச மாமெதினுந் தம்மிடைப் பிரியம்
நிகழ்வதா லானந்தமாகு
மாசிலா சச்சிதானந்த மகமென்
மாதவன்றனை யடைந்துய்மின்.

### இதுவுமது

28. வானிடை நீலம் கிளிஞ்சிடை வெள்ளி
மருவிடு கட்டையிற் கள்வன்
கானலினீருங் கயிற்றிடை யரவுங்
காணுறு கனவினன் தகரு
மீனமாமலடி சேய் முயற்கோடு
மெனத்திகழ் பிரபஞ்சம் பொய்யே
ஞானமே மெய்யென்றருள் பரஞ்சோதி
நற்பதம் பணிந்துய வம்மின்.

### இயற்றியவர்

29. இப்புவியதனுள் செப்பருந் தமிழ்தே
ரியற்கையு முலகியல்போடு
முப்பகைகடியு நற்பொருளுணர்ந்து
மோன நன்நிலே வழா, சாமி
யப்பவென் முதலியாரவர்க்கிடமா
மறமலி நல்லிராம் கோட்ட
செப்பரும் பதியி லவர் பணிபுரிந்து
செந்தமிழ் பயின்ற மாணக்கன்.

### இதுவுமது

30. கத்துவார் கடல்சூழ் நாகை னீலாவின்
கவினமர் தென் மறு கழகு
முத்தெனும் புலவர் தமக்கருள் சுரந்த
மொய் கடம் பணிதரு குமர
உத்தம கோயிற் றெருவதில் வாழ்ந்து
வுலகவர் தமக்கு மெஞ்ஞான
தத்துவ னெறியை யுணர்த்து கோவிந்த
சாமியாம் சற்குரு சீடன்.

இதுவுமது

31. சீர்திகழேர்வை பொதுனலப் பள்ளி
சிறந்திடு தலைமையாசிரியன்
பேர்பெறுனல்ல வலிவலமதனிற்
பிறங்கிடு வுயர் திருஞான
பார்புகழ் சபையில் மெய்யுணர் வடைந்த
பண்புடையவர் கடங்குழுவில்
நேர்பெற வடைந்து மாபெருமாயை
நீங்கனல் மெய்யுணர் வடைந்தோன்

இதுவுமது

32. திங்கள் மும்மாரி பொழிய னல்வளங்கொள்
செம்பியன் பொன்னிபாய் நாட்டில்
மங்கலமியாவு மமைந்து மெஞ்ஞான
வள மலி ஏருவைக்காட்டில்
துங்கனல்லறிவுங் கலைகளினியல்புந்
துலங்கிடு மெழில் முத்து வைத்திய
லிங்கனற் புதல்வ னிராமனின் கவியி
னிலவிய பிழை பொருத்தருள்க

56755

முற்றிற்று.

CONNEMARA PUBLIC LIBRARY
28 AUG 1956
MADRAS